09.02.2026 OS.No.179/2021 DW2 Name :.முருகேசன்

குறுக்கு விசாரணை

1. முதல் விசாரணை பிரமாண பத்திரத்தில் வழக்கறிஞர் அலுவலத்தில் தயார் செய்து வைக்கபட்டிருந்ததில் நான் கையெழுத்து போட்டேன். 1 முதல் 4 பிரதிவாதிகளுக்காக நான் வழக்கு நடத்துவதாக பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் அதை நான் படித்து பாரக்கவில்லை. என்னுடைய தகப்பனார் சொத்தில் எங்களுக்கு பாகம் கொடுத்துள்ளார். அது எங்களுடைய பாட்டானர் சொத்து ஆகும். அதன்மூலம் எங்களுக்கு பாகம் உண்டு.
2. என் தகப்பனாருடன் பிறந்த நபர்கள் மொத்தம் 3 பேர். முனிசாமி கண்ணுகவுண்டர், சுப்பிரமணி ஆவார்கள். 1974ல் அவர்கள் மூன்றுபேரும் சொத்துகளை பாகம் பிரித்துக்கொண்டுள்ளார்கள் என்றால் அதுபற்றி தெரியவில்லை. என் தகப்பனார் பெயர் கண்ணுகவுண்டர். நான் என்னுடைய தந்தையின் முதல் தாரத்தின் மகன் எனக்கு அக்கா உண்டு. 2வது தாரமாக நாகராஜ், செல்வராஜ், என்ற இரண்டு மகன்கள் உள்ளனர். அதை தவிர மூன்று பெண் வாரிசுகள் உள்ளார்கள். எனக்கும் நாகராஜ், செல்வராஜிக்கும் என்னுடைய தகப்பனார் சொத்து பிரித்து கொடுத்தார்.
3. 2007ல் அவ்வாறு பிரித்து கொடுத்தார். அதை மூன்று பேருக்கும் தனித்தனி செட்டில்மெண்ட் பத்திரங்களாக பதிவு செய்து கொடுத்தார். எனக்கு எழுதிகொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள சொத்தின் விவரங்கள் எனக்கு தெரியவில்லை. 4 அயிட்ட சொத்துகள் பாகமாக என் அப்பா கொடுத்தார். அதன் விஸ்தீரணங்கள்

எனக்கு தெரியாது. மொத்தம் எவ்வளவு சொத்து என் தகப்பனார் கொடுத்தார் என்பது எனக்கு தெரியவில்லை.

4. சொத்து பற்றிய விவரங்கள் முழுமையாக எனக்கு தெரியாது. வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள பதிலில் உள்ள விவரங்களும் எனக்கு தெரியாது. என் தந்தையார் எனக்கு 1 ஏக்கர் 26 செண்ட் நிலம் தான் கொடுத்தார் என்றால் எனக்கு அது தெரியவில்லை. அந்த சொத்துகள் உட்பிரிவு செய்யபட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. சர்வே எண். 144/7எ-ல் எனக்கு 72 செண்ட் பாகமாக வந்தது என்றால் அதுபற்றி தெரியவில்லை. என்னுடைய சொத்திற்கு நான் பட்டா வாங்கியுள்ளேன்.
5. பட்டா எண் 895 என்று சொன்னால் எனக்கு படிக்க தெரியாது. அதில் 2 சர்வே எண் குறிப்பிட்டு பட்டா பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. என் தகப்பனார் கொடுத்த சொத்து தவிர நான் சுயமாக சொத்து சம்பாதிக்கவில்லை. அந்த பட்டாவில் 32 செண்டை நான் தவறாக பட்டா செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சர்வே எண் 144/19 சொத்தை என் தகப்பனார் எனக்கு எழுதிகொடுக்கவில்லை என்றால் அது எனக்கு தெரியாது.
6. எங்களுக்கு கொடுத்த நிலத்தில் போர் கிணறு எதுவும் பாகமாக கொடுக்கபடவில்லை. பாகம் கொடுத்த சமயத்தில் எங்களுக்கு சொத்தில் போர் இருந்தது என்றால் உண்மை கிடையாது. என்னுடைய சொத்தில் நான் சொந்தமாக செலவு செய்து போர் போட்டேன். அதன் சர்வே எண் தெரியாது. என்னுடைய சொத்தை தவிர வேறு எங்கும் போர் போடபட்டிருந்தால் அது என்னுடையது கிடையாது என்றால் சரியல்ல.

7. எனக்கு பாகம் வந்த சொத்தில் போர் எதுவும் போடபடவில்லை என்றால் சரியல்ல. 5 பேரும் சேர்ந்து கூட்டாக தான் போர் போட்டோம். கிருஷ்ணமூர்த்தி, சிவலிங்கம் கணேசன், முனிரத்தினம், நான் சேர்ந்து போட்டோம். அதற்கு எழுத்துமூலமாக ஆவணங்கள் எதுவும் ஏற்படுத்தவில்லை. 1400 அடி ஆழத்திற்கு போர் போட்டோம். எவ்வளவு நீளத்திற்கு பைப் வாங்கபட்டது என்பது தெரியாது. 4000அடிக்கு ஓயர் வாங்கபட்டது. 7 1/2 எச்.பி மோட்டார் பொறுத்தபட்டுள்ளது. எத்தனை நிலைக்கு அது பொறுத்தபட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது.
8. உண்மையில் நாங்கள் கூட்டாக போர் போடாத காரணத்தினால் தான் சரியாக விவரங்கள் கூறமுடியவில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனார் தான் சொத்தில் போர் போட்டு கொடுத்தார் என்றால் சரியல்ல. என் அப்பா போர் சம்மந்தமாக போட்டுள்ள விவரங்கள் உண்மையானது கிடையாது. என் தம்பிக்கு என் அப்பா எவ்வளவு சொத்து பாகமாக கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. நாகராஜிக்கு எவ்வளவு சொத்து கொடுக்கபட்டது என்பது எனக்கு தெரியாது. எனக்கு பாகம் கொடுத்த சொத்தை காட்டிலிலும் 20 செண்ட் சொத்தை என்னுடைய பட்டாவில் அதிகமாக காட்டி மோசடியாக பட்டா பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.
9. என் அப்பா நாகராஜிக்கு 1 ஏக்கர் 36 செண்ட் கொடுத்தார் என்றால் அது எனக்கு தெரியாது. 2 அயிட்ட சொத்தாக கொடுத்தார் என்றால் அது எனக்கு தெரியாது. தனிதனியாக இரண்டு துண்டுகளாக அந்த சொத்து கொடுக்கபட்டது பற்றி எனக்கு தெரியாது. வழக்கிற்காக உண்மையை மறைத்து கூறுகிறேன் என்றால் சரியல்ல. வாதி

அவருடைய மகன்களுக்கு சொத்து எழுதிகொடுத்த விவரம் எனக்கு தெரியாது.

10.நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்திற்கு வந்தபோது நான் இல்லை. பின்னிட்டு அந்த விவரத்தை கேட்டு தெரிந்துகொண்டேன். அறிக்கை பற்றிய விவரம் எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் சொத்து 26 உட்பிரிவுகளாக பிரிக்கபட்டுள்ளதாக கூறியுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. காணாற்றிலிருந்து பொதுகால்வாய் வரை வழி செல்கிறது. தற்போதும் அந்த வழி உள்ளது. அந்த பொதுவழியை பிரதிவாதிகள் சேர்ந்து அழித்து விட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல.

11.வாதியின் சொத்திற்கு வடக்கில் பிரதிவாதிகளின் நிலம் உள்ளது. அந்த சொத்திற்கு தெற்கில் வழி இருந்தது. அந்த பொதுவழியை நாங்கள் அனைவரும் சேர்ந்து அழித்துவிட்டோம் என்றால் சரியல்ல. நான்கு அடி பள்ளம் தான் உள்ளது. அதை சாதகமாக பயன்படுத்தி வழியை அழித்துள்ளோம் என்றால் சரியல்ல. மோசடியாக பட்டா தயார் செய்து சொத்துகளை என் பெயரில் மாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. அதை வைத்து தான் உரிமை கொண்டாடுகிறேன் என்றால் சரியல்ல. அதை கேட்டதால் வாதியுடன் விரோதம் கொண்டுள்ளேன் என்றல் சரியல்ல.

12.மற்ற பிரதிவாதிகளுடன் சேர்ந்து வாதிக்கு தொந்தரவு கொடுக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் பாகத்தில் வந்த போரை ஓட்டவிடாமல் நாங்கள் தடுத்து வருகிறோம் என்றால் சரியல்ல. என்னை ஏமாற்றி அவர்கள் சொத்தை எழுதி வாங்கியுள்ளார். பிரதிவாதிகளுக்கு எந்த போரும் இல்லை. போர் பிரச்சனைக்காக சண்டை ஏற்பட்டு

காவல்நிலையம் செல்லவில்லை. அசல் ஆவணத்தை ஒப்படைக்க வாதிக்கு அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை.

13.புகார் எதுவும் கொடுக்கவில்லை. நாங்கள் தான் வாதியிடம் ஆவணத்தை ஒப்படைத்துள்ளோம் என்றால் சரியல்ல. பிரமாண பத்திரத்தில் 16ம் பத்தியில் எதிர்வழக்குரையில் குறிப்பிடாத சங்கதிகளை கூறியுள்ளதால் அதை சட்டபடி ஏற்கமுடியாது என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. சொத்து உட்பிரிவு செய்யபடவில்லை என தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 09/02/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.02.09 17:18:28 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.